இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 07-08-2025

# தென் மாவட்டங்களின் தொழிற்புரட்சி!

தனது ஆட்சிக்கு 'திராவிட மாடல் ஆட்சி' என்று அடையாளம் சூட்டிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 'எல்லோர்க்கும் எல்லாம்' என்ற உள்ளடக்கத்தையும் சொன்னார். அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மக்கள் வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி, அனைத்து மாவட்டத்து வளர்ச்சி என்று விளக்கமும் அளித்தார். இந்த உன்னதமான நோக்கம் தினந்தோறும் நிறைவேறிவரும் காட்சிகளைத்தான் தொடர்ந்து பார்த்து வருகிறோம்.

**பொதுவாக சென்னையைச் சுற்றி, அல்லது பெரிய நகரங்களைச் சுற்றி தொழிற்சாலைகள் அமையும் சூழலை மாற்றி, அனைத்துப் பகுதிகளுக்கும் அனைத்து விதமான தொழிற்சாலைகளையும் கொண்டு சென்றார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதிக தொழிற்சாலைகள் உள்ள மாநிலமாக, அதிகத் தொழிலாளர்கள் உள்ள மாநிலமாக, அதிலும் குறிப்பாக அதிக பெண் தொழிலாளர்களைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. இதற்குக் காரணம், 'அனைத்து மாவட்ட வளர்ச்சி' என்ற முதலமைச்சரின் நோக்கம் ஆகும். 'சிப்காட்' தொழில் வளாகங்கள் அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்பட்டு வருவதும் இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான்.**

இந்த வரிசையில் கடந்த 4ஆம் தேதியன்று தூத்துக்குடியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டங்கள் தென் மாவட்டங்களின் தொழிற்புரட்சிக்கு அடித்தளம் அமைத்துள்ளன.

தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருக்கிறது. இந்த நிறுவனங்களின் மொத்த மதிப்பு 32,554 கோடி ரூபாய் ஆகும். இதன் மூலமாக 49 ஆயிரத்து 845 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். நான்கு நிறுவனங்களின் வணிக உற்பத்தியை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இதன் மொத்த மதிப்பு 1,230 கோடி ரூபாய் ஆகும். இதன் மூலமாக 3,100 பேர் வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள். மூன்று நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இன்று (4.8.2025) தூத்துக்குடியில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 32,554 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீட்டில், 49,845 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கிடும் வகையில் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 1,230 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 3,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 4 முடிவுற்ற திட்டங்களின் வணிக உற்பத்தியினை தொடங்கி வைத்து, மூன்று நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

**வியட்நாம் நாட்டைச் சேர்ந்த வின்ஃபாஸ்ட் நிறுவனம் தனது மின்சார கார் உற்பத்தியை தூத்துக்குடியில் தொடங்கி இருக்கிறது. 18 மாதங்களுக்கு முன் இந்த நிறுவனத்துக்கான அடிக்கல்லை முதலமைச்சர் நாட்டினார். இப்போது அந்த நிறுவனம் தனது உற்பத்தியைத் தொடங்கிவிட்டது. 1300 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 50 ஆயிரம் மின் வாகனங்களை தயாரிக்கப் போகிறார்கள். இந்தியாவின் இரண்டாவது முழு மின்வாகன உற்பத்தித் திட்டம் இதுதான்.**

**"இந்தியாவின் மொத்த மின் வாகன உற்பத்தியில், 40 விழுக்காடு தமிழ்நாட்டில் இருந்துதான் உற்பத்தியாகிறது! தமிழ்நாடுதான், இந்தியாவின் வாகன உற்பத்தி மற்றும் மின் வாகன உற்பத்தியின் 'கேப்பிட்டல்' என்று நெஞ்சை நிமிர்த்தி நான் சொல்வேன்! சென்னைதான் இந்தியாவின் டெட்ராய்ட்! திருப்பெரும்புதூரில் எப்படி முதல் கார் உற்பத்தி திட்டம் தொடங்கப்பட்டதோ, அதேபோன்று, இன்றைக்கு தூத்துக்குடியில் முதல் மின்வாகன உற்பத்தித் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது! இதனால், தூத்துக்குடி மட்டுமல்ல; தமிழ்நாட்டின் தென் மாவட்டங்கள் மிகப் பெரிய தொழில் பகுதியாக வளர்ச்சியடையும். அதனால், உறுதியோடு சொல்கிறேன்; இந்நாள் தென் மாவட்டங்களின் ஒரு பொன்னாள். இதுதான், தமிழ்நாட்டின் 'Ease of doing Business'க்கு அத்தாட்சி" என்று மாண்புமிகு முதலமைச்சர் சொல்லி இருப்பது வெறும் வார்த்தைகள் அல்ல. வருங்காலத்தில் நாம் காணப்போகும் காட்சிகள் ஆகும்.**

முதலமைச்சரின் 'நான் முதல்வன்' திட்டத்தில் பயிற்சி பெற்ற தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட டிப்ளமோ மாணவர்கள் இந்த நிறுவனத்தில் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். தென் மாவட்டத்தைச் சேர்ந்த பணியாளர்களைத்தான் இந்த நிறுவனம் அதிகமாக வேலைக்கு எடுக்க இருக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் தென் மாவட்டங்களில் தொழில்வளர்ச்சி மிகச் சிறப்பாக இருந்துள்ளது. தூத்துக்குடியில் நியோ டைட்டல் பார்க், மதுரையில் டைட்டல் பார்க், நெல்லையில் எரிசக்தித் திட்டங்கள், விருதுநகரில் ஜவுளி பூங்கா, தூத்துக்குடியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆகியவை கொண்டுவரப்பட்டுள்ளன. தூத்துக்குடியை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையமாக அரசு வளர்த்தெடுத்து வருகிறது.

**கடந்த 4ஆம் தேதி நடைபெற்ற விழாவில் நான்கு முக்கியமான அறிவிப்புகளையும் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். தூத்துக்குடியில் விண்வெளி பூங்கா, கப்பல் கட்டுமான நிறுவனம், ஏற்றுமதி மையம், நெல்லையில் உணவு பதப்படுத்துதல் மண்டலப் பிரிவு ஆகிய அறிவிப்புகளைச் செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். இவையும் இணைந்தால் தென் மாவட்டத்தில் தொழிற்புரட்சியானது நிச்சயம் நிகழும்.**

உலகளாவிய முதலீட்டில் உள்ளூருக்கான முழுமையான வளர்ச்சி என்கின்ற திராவிட மாடல் அரசின் நோக்கம் நிறைவேறி வரும் காட்சியாக இதனைச் சொல்லலாம்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (5.8.2025) தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், துணை மேயர் மு.மகேஷ் குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பெண்கள் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடு – அதிகாரமளிப்பதில்

## பங்களிப்பை மதிப்பாய்வு செய்வதற்கான முன்மொழிவு ஒன்றிய அரசிடம் உள்ளதா?

### மக்களவையில் – கோவை கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 7- பெண்கள் சுயஉதவி குழுக்களின் (SHGs) செயல்பாடு மற்றும் நாட்டில் பெண்கள் அதிகாரமளிப்பதில் அவர்களின் பங்களிப்பை மதிப்பாய்வு செய்வதற்கான ஏதேனும் முன்மொழிவு ஒன்றிய அரசிடம் உள்ளதா? அப்படியானால், அதன் முடிவு என்ன? இல்லை என்றால் அதற்கான காரணங்கள் என்ன? என்று மக்களவையில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய அமைச்சர் பதில் வருமாறு :- மகளிர் சுயஉதவி குழுக்களின் (SHGs) கிராமப்புற செயல்திறன் மற்றும் பங்களிப்பை மதிப்பிடுங்கள். இருப்பினும், தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா- தேசிய வாழ்வாதார இயக்கத்தின் (DAY-NRLM) கீழ், பெண் சுயஉதவி குழுக்களின் (SHGs) செயல்திறன் பற்றிய வழக்கமான ஆய்வுகள் மற்றும் நாட்டில், பெண்கள் அதிகாரமளிப்பதில் அவர்களின் பங்களிப்பின் மதிப்பீடுகள், செயல்திறன் ஆய்வுக் குழு (PRC) கூட்டங்கள் (PRC) மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. தரவு, தேசிய அளவிலான கண்காணிப்பாளர்களின் கள வருகைகள் மற்றும் சுயாதீன மூன்றாம் தரப்பு ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் திட்டங்களின் மதிப்பீடு மற்றும் மதிப்பீடு கூடுதலாக, பின்வரும் மதிப்பீடு மற்றும் மதிப்பீட்டு ஆய்வுகள் நாட்டில் சுய உதவிக்குழுக்களின் பங்களிப்பையும் DAY-NRLM இன் விளைவுகளையும் புரிந்து கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ளன. DAY -NRLM இன் மதிப்பீட்டு ஆய்வு 2019 - 20 இல் தாக்க மதிப்பீட்டிற்கான சர்வதேச முயற்சியால் (3IE) நடத்தப்பட்டது. பீகார், மேற்கு வங்கம், ஒடிசா, ஜார்கண்ட், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் முழுவதும் ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள் பின்வருமாறு : வருமான மேம்பாடு : சிகிச்சைப் பகுதிகளில் பெண் சுய உதவிக் குழுக்கள் அடிப்படையை விட 19% வருமானம் அதிகரித்துள்ளது. கடன்முறைப்படுத்தல்: முறைசாரா கடன்களை நம்பியதில் 20% சரிவு ஏற்பட்டது, இது முறையான நிதிச் சேவைகளுக்கான மேம்பட்ட அணுகலைக் குறிக்கிறது.

சேமிப்பு வளர்ச்சி : பங்கேற்பாளர்கள் சேமிப்பில் 28% அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளனர், இது வலுவான நிதி நிலைத்தன்மை மற்றும் வள மேலாண்மை ஆகியவற்றை பிரதிபலிக்கிறது.

தொழிலாளர் பங்கேற்பு: கட்டுப்பாட்டுப் பகுதிகளுடன் ஒப்பிடும் போது, சிகிச்சைப் பகுதிகளில் 4% அதிகமான பெண்கள் இரண்டாம் நிலைத் தொழில்களைப் புகாரளிப்பதன் மூலம் தொழிலாளர் படை ஈடுபாடு கணிசமாக உயர்ந்துள்ளது. சமூகத் திட்டங்களுக்கான அணுகல்: சிகிச்சைக் குடும்பங்களால் பெறப்படும் சமூக நலத் திட்டங்களின் எண்ணிக்கையில் 6.5% அதிகரித்தது (2.8 திட்டங்களின் அடிப்படையுடன் ஒப்பிடும் போது), மேம்பட்ட விழிப்புணர்வையும் மக்கள் நலத் திட்டங்களின் அணுகலையும் வெளிப்படுத்துகிறது. அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் மகிலாகிசனின் நிலையைப் புரிந்து கொள்வதற்கான ஆய்வு, டெவலப்மென்ட் & ரிசர்ச் சர்வீசஸ் (பி) லிமிடெட் (டிஆர்எஸ்) 2024-25ல் ஆறு மாநிலங்களில் (அருணாச்சலப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, கேரளா, உத்தரப் பிரதேசம்) நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து நடத்தப்பட்டது.

ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள் பின்வருமாறு : மகிலா கிசான்களின் சமூக-பொருளாதார அதிகாரமளித்தல்: மஹிலா கிசான்களில், திட்டத்தின் அறிக்கை நன்மைகள் அதிகரித்த நம்பிக்கை (48%), மேம்பட்ட முடிவெடுக்கும் மற்றும் குறைக்கப்பட்ட தொழிலாளர் செலவுகள் (32%), மேம்பட்ட விவசாய அறிவு (40%) மற்றும் அதிக தானிய விளைச்சல் (52%) ஆகியவை அடங்கும். கூடுதலாக, இந்தத் திட்டம் ஆண்டு வருமானத்தில் அதிகரிப்புக்கு பங்களித்தது, 18% பங்கேற்பு குடும்பங்கள் ஆண்டு வருமானத்தில் கூடுதல் 7% கூடுதல் ஆதாயங்களைப் புகாரளித்தன. ஸ்டார்ட்-அப் கிராமத் தொழில் முனைவோர் திட்டத்தின் (SVEP) மதிப்பீடு மேம்பாடு & நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

ரிசர்ச் சர்வீசஸ் (பி) லிமிடெட் (டிஆர்எஸ்) 2024 இல். ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள் பின்வருமாறு : SVEP மூலம் பெண்களுக்கு அதிகாரமளித்தல்:

இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க சாதனை பெண்களின் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதில் அதிக கவனம் செலுத்துவதாகும் 71% நிறுவனங்கள் பெண்களுக்குச் சொந்தமானவை, கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் அதன் பங்கு. சுமார் 35% தொழில்முனைவோர் தங்கள் SVEP-ஆதரவு நிறுவனங்களைத் தொடங்குவதற்கு முன் வருமானம் ஈட்டும் செயல்களில் ஈடுபடவில்லை, மேலும் இந்த நிறுவனங்களில் தோராயமாக 74% இப்போது குடும்ப வருமானத்தின் முதன்மை ஆதாரமாகி விட்டன. ஊரக வளர்ச்சி அமைச்சகம் (MoRD) 2023 இல் வணிக நிருபர்கள் (BC) சாகி மாதிரியின் செயல்திறன் குறித்த ஒரு ஆய்வை நியமித்தது, இது மாதிரியின் விரிவான பகுப்பாய்வை அதன் செயலாக்க கட்டமைப்பு, பயிற்சி மற்றும் வரிசைப்படுத்தல் செயல்முறைகள், வழங்கப்படும் சேவைகள் மற்றும் கிராமப்புற சமூகங்கள் இரண்டிலும் அதன் தாக்கத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள் பின்வருமாறு: 45% BC சாக்கியர்கள் DIGI-PAY SAKHIS ஆக மாறியுள்ளனர், இதன் மூலம் டிஜிட்டல் நிதிச் சேவைகளை வழங்குவதில் அவர்களின் திறன்களை விரிவுபடுத்தியுள்ளனர். BC சாக்கியர்களின் வருமான நிலைகளுக்கும் அவர்களின் தொழில் முனைவோர் ஈடுபாட்டிற்கும் இடையே உள்ள உறவு தொடர்பாக ஒரு சுவாரஸ்யமான போக்கு வெளிப்பட்டுள்ளது. 61%க்கும் மேலான BC சாக்கியர்கள் வங்கி நிருபர்களாக தங்கள் பங்கின் மூலம் கிடைக்கும் வருமானத்தை மட்டுமே நம்பியுள்ளனர். BC ஏஜெண்டுகளாக தங்கள் பங்கை மட்டுமே நம்பியிருக்கும் BC சாக்கியர்கள், தங்கள் வருமான ஆதாரங்களை பன்முகப் படுத்துபவர்களைக் காட்டிலும் இந்தச் செயல்பாட்டின் மூலம் அதிகம் சம்பாதிக்க முனைகிறார்கள். இந்த முடிவுகள், DAY-NRLM திட்டத்தின் கீழ் நீடித்த மற்றும் பயனுள்ள ஆதரவின் மூலம் பெண்களை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டின் தரவு ஆதரவு ஆதாரத்தை வழங்குகின்றன.

### தேசிய தொழில்நுட்ப டெக்ஸ்டைல்ஸ் மிஷன் (NTTM) உள்நாட்டு உற்பத்தியின் கீழ்

## திருப்பூர் மற்றும் ஈரோடு பகுதிகளை சார்ந்து ஏதேனும் முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளதா?

### மக்களவையில் – ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!



புதுடெல்லி, ஆக.7- தேசிய தொழில்நுட்ப டெக்ஸ்டைல்ஸ் மிஷன் - (NTTM) - உள்நாட்டு உற்பத்தியின் கீழ் இன் Indigenous Manufacturing கீழ், திருப்பூர் மற்றும் ஈரோடு பகுதிகளை சார்ந்து ஏதேனும் முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளதா?

பெறப்பட்டிருந்தால், அவை தொடர்பான விவரங்கள் மற்றும் தற்போதைய நிலை என்ன?நெசவுத் தொழிலில் பிரபலமான திருப்பூர், விளையாட்டு தொழில்நுட்ப ஜவுளி (Sports Tech Textiles) துறைக்கு தேவையான தொழில் சூழலைக் கொண்டுள்ளது என்பதை அமைச்சகம் அறியுமா?

இதனை முன்னேற்ற NTTM-ன் கீழ் கொத்து (Cluster) திட்டங்கள் அல்லது கூட்டுறவுத் திட்டங்கள் எதாவது எடுக்கப்பட்டுள்ளதா?

இந்த பகுதியில் உள்ள தற்போதைய திறனை அடிப்படையாகக் கொண்டு NTTM-ன் கீழ் பல்வகைப்படுத்தல் (Diversification) திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளனவா?

ஈரோடு பகுதியில், agro-tech மற்றும் pack-tech உற்பத்தியை ஊக்குவிக்க அமைச்சகம் திட்டமிட்டுள்ளதா? திட்டமிட்டிருந்தால், அதன் விவரங்கள் என்ன என்று மக்களவையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒன்றிய அரசின் பதில் வருமாறு :-

இந்திய அரசு, திருப்பூர் மற்றும் ஈரோடு பகுதிகளில் இருந்து வந்த இரண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவை GREAT Scheme மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**திருப்பூரில் ஒப்புதல் பெற்ற திட்டம்:**

*"Design and Development of pilot scale innovative Zero Solid Discharge (ZSD) system for resource recovery from final residue in textile and industrial ZLD plants (circularity & sustainability)"*

**ஈரோட்டில் ஒப்புதல் பெற்ற திட்டம்:**

*"Natural Anti-Microbial Coated textiles for Hospital wear"* தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பன்னிரண்டு (12) Research Projects இரண்டு (2) Start-up Projects ஒப்புதல் பெற்றுள்ளன. மேலும் தமிழ்நாட்டிலுள்ள 12 கல்வி நிறுவனங்களுக்கு, தங்களது பாடத்திட்டத்தில் Technical Textiles தொடர்பான பாடங்களை சேர்க்க NTTM மூலம் ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

திருப்பூர், நாடளவில் முக்கியமான Textile Cluster என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. NTTM என்பது இந்தியா முழுவதும் தொழில்நுட்ப நூல்களின் 12 பகுதிகளையும் ஊக்குவிக்கும் Pan India Mission ஆகும். இதில் ஈரோடு மற்றும் திருப்பூர் போன்ற Clusters-க்கான வளர்ச்சியும் அடங்கியுள்ளது.

ஜவுளித்துறை அமைச்சகம் இந்தியாவின் முக்கிய தொழில்நுட்ப நூல் துறைகளில் 8 Centers of Excellence-ஐ நிறுவியுள்ளது. அத்தகைய ஒரு மையமான South India Textile Research Association (SITRA), கோயம்புத்தூரில் அமைந்துள்ளது. இது ஈரோடு மற்றும் திருப்பூர் பகுதிகளுக்கு சேவையளிப்பதோடு, இந்தியா முழுவது முள்ள தொழில்துறைக்கும் சேவைகளை வழங்குகிறது.

NTTM மார்ச் 2020-இல் தொடங்கியதிலிருந்து, இந்தியா முழுவதும் மொத்தம் 32 விழிப்புணர்வு மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன, இதில் 2 நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ளது.

National Technical Textiles Mission (NTTM) இன் கீழ், தொழில்நுட்ப நூல்களின் 12 வகைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இதில் Productivity மற்றும் Efficiency-ஐ மேம்படுத்த Agro-Tech மற்றும் Pack-Tech ஆகியவை முக்கியமான பகுதிகள் ஆகும். Agrotech பகுதியில் 14 Research Projects மற்றும் Packtech பகுதியில் 1 Research Project என மொத்தமாக 15 திட்டங்கள் NTTM-இன் கீழ் ஒப்புதல் பெற்றுள்ளன. இதில் ஒன்று தமிழ்நாட்டில் Agrotech பகுதியில் ஒப்புதல் பெற்றுள்ளது. மேலும், Production Linked Incentive (PLI) Scheme for Textiles-ன் கீழ் Agrotech பகுதியில் மொத்தமாக 6 Manufacturing Units-க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, SASMIRA, Mumbai-யில் அமைந்துள்ள Center of Excellence, இந்தியா முழுவதும் உள்ள தொழில்துறைக்கு Agrotech நூல்கள் தொடர்பான சேவையை வழங்குகிறது. NTTM என்பது இந்தியா முழுவதும் செயல்படும் ஒரு திட்டம் ஆகும். இது, ஈரோடு உட்பட Technical Textiles தொடர்பான அனைத்து வகைகளுக்கும் - உதாரணமாக Agrotech மற்றும் Packtech - கூட்டு ஆய்வு (Research), புதிய கண்டுபிடிப்பு (Innovation), சந்தை ஊக்குவிப்பு (Market Promotion), திறன் மேம்பாடு (Skill Development), மற்றும் கல்வி (Education) ஆகியவை பற்றிய முழுமையான ஆதரவுகளை வழங்குகிறது என்று ஒன்றிய அரசு பதிலில் தெரிவித்துள்ளது.



அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் மாநிலத் தலைநகர் பாஸ்டன் நகரிலுள்ள "பாஸ்டன் மாநாடு மற்றும் கண்காட்சி அரங்க வளாகத்தில்" (Boston Convention and Exhibition Centre) நடைபெற்றுவரும் சர்வதேசச் சட்டமன்ற உறுப்பினர்கள் உச்சி மாநாட்டில் (Global Legislative Summit) கலந்து கொண்டுள்ள கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், அம்மாநாட்டின் முதல் நாளன்று "மாநிலச் சட்டப்பேரவைகளின் தேசிய மாநாடு" (National Conference of State Legislatures – NCSL) கூட்டமைப்பின் தலைவரும் யூட்டா மாநில மேலவையின் (Senate) தற்காலிகத் தலைவருமான வாய்னே ஹார்பர் (Wayne Harper) அவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.